வயாவிளான் தெற்கு

## ஞானவைரவர் ஆலயம்

# வைரவர் பக்தி மாலை



தொகுப்பு–வடிவமைப்பு

ம.ஜெகநாதன் (ஜெக்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வயாவிளான் தெற்கு
ஞானவைரவர் ஆலயம்

# வைரவர் பக்தி மாலை



தொகுப்பு–வடிவமைப்பு

ம.ஜெகநாதன் (ஜெக்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

**நூலின் பெயர்:** வைரவர் பக்தி மாலை

**அட்டைப்படம்:** இடப்பெயர்வுகால ஆலயத்தின் தோற்றம்.

**தொகுப்பு–வடிவமைப்பு:** ம.ஜெகநாதன் (ஜெக்கி)

**வெளியீடு:** சின்னத்துரை இராசதுரை

**அச்சுப்பதிவு:** தீபம் பிறிண்டேர்ஸ், யாழ்.

**முதல் பதிப்பு:** டிசெம்பர் 2018

**இரண்டாம் பதிப்பு:** ஜனவரி 2019

**பக்கங்கள்:** 5+31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே..

தலைப்பு பக்கம்


1. வரம் தா வைரவா! ... ... ... ... 1
2. வைரவரைப் போற்றும் தேவாரப் பாடல் ... 2
3. ஸ்வர்ணாகர்ஷண வைரவ அர்ச்சனை ... 3
4. வைரவர் அருட்பா ... ... ... ... 4
5. வைரவர் அகவல் (அழைப்பு)... ... ... 5
6. தல புராணங்கள் ... ... ... ... 7
7. ஸ்வர்ணாகர்ஷண வைரவ அஷ்டகம். ... 15
8. வைரவச் சக்கரம் .. ... ... ... ... 18
9. வைரவ சஷ்டிகவசம் ... ... ... ... 19
10. வெற்றி தரும் வைரவர் 108 போற்றி... ... 21
11. வைரவர் தோத்திரத் துதிகள் ... ... ... 25

பின்னிணைப்பு

12. ஞானவைரவர் தல வரலாறு ... ... ... 27
13. வைரவர் தோற்றம் .. ... ... ... ... 28
14. யார் இந்த வைரவர்? ... ... ... ... 28
15. வைரவர் வழிபாடு .. ... ... ... ... 29
16. வைரவரை வழிபாடு செய்ய சிறந்த நாள் ... 29
17. வயாவிளான் இடப்பெயர்வு ஓர் பதிவு... ... 30





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மிகத் தொன்மை வாய்ந்த ஆலயமாக அறியப்பட்ட வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம் மிகச்சிறந்த கட்டுமானங்களைக் கொண்டு விளங்கியது. எனினும் இடப்பெயர்வு காலத்தில் அதிகம் பாதிப்புக்களை எதிர்கொண்டது.

வயாவிளான் மக்களின் வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்தது தான் வைரவர் வழிபாடு. இடப்பெயர்வு காலத்திலும் விசேட அனுமதி பெற்று வைரவரை வழிபட்டு வந்ததே இதற்கு சான்று. வயாவிளான் மக்களின் காவலன் வைரவர் என்பது மக்களின் அசையாத நம்பிக்கை.

ஆலயமும், கிராமமும் மீள் எழுச்சிபெற்று வரும் நிலையில் இந்நூல் அறிமுகம் செய்யப்படுகிறது. மக்கள் வைரவர் பாடல்களை இலகுவாக வும், அர்த்தபுஸ்டியுடனும் கிரகித்து மனனம் செய்வற்கேற்ற முறையி லும், வணக்க முறைமைக்கு தகுந்தாற் போலும் தரப்பட்டுள்ளது.

இந்நூல் ஒருமாதகால இடைவெளியில் திருத்தங்கள், மெருகூட்டல் களுடன் சில பக்கங்களையும் இணைத்து இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. வைரவ பாடல்கள் மிக அரிதாகவே காணப்படும் இவ்வேளையில் இவ்வெளியீடு அதனை ஓரளவு பூர்த்திசெய்யும்.

இடப்பெயர்வுகால ஆலயத்தின் தோற்றம் அட்டையை அலங்கரிக்கிறது. காலம் கடந்தும் மக்கள் மனதில் இவ்வாலய தோற்றம் பழைய நினைவுகளை மீட்டிச்செல்லும்.

நண்பன் சின்னத்துரை இராசதுரை அவர்களின் நிதிப்பங்களிப்புடன் இந்நூல் இலவச வெளியீடாக வெளிவருகிறது. அன்னார் வைரவப் பெருமானின் இறையருளுக்குப் பாத்திரமானவராவர்.

முக்கியத்துவம் கருதி "ஆலய தலவரலாறு" மற்றும் "வயாவிளான் இடப்பெயர்வு ஓர் பதிவு" என்பன பின்னிணைப்பில் சுருக்கமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.


20.01.2019 அன்று . புதிய ஆலயத்திற்கான அத்திவாரம் இடப்படும் இவ்வரலாற்று சிறப்புமிக்க இப்புனித நந்நாளில் அறிமுகப்படுத்தப்படும் இந்நூலை மக்கள் அன்றாட இறைவழிபாட்டுடன் பயன்பாடுடைய தாக்கிக் கொள்ளவேண்டும்.

வைரவா சரணம்!

-ம.ஜெகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய குருவின் ஆசியுரை



வைரவ வழிபாடு மனச்சாந்தியை தரவல்லது. மனக்கிலேசத்தை, பயத்தை அகற்றி துணிவைத் தரவல்லது.

மீண்டும் வயாவிளானுக்கு வருவோம் பூசை செய்வோம் எனக் கனவிலும் நான் கருதவில்லை, ஆனால் என்னே தெய்வச் செயல் படிப்படியாக இடங்கள் விடுவிக்கப்பட்டவுடன் ஆலய வழிபாடு கள் உடனடியாகவே தொடங்கியது.

ஆலயத்திற்கு ஆங்காங்கே சில ஊறுகள் ஏற்பட்டிருந்தாலும் மூலமூர்த்தி வைரவர் மற்றும் விக்கிரகங்கள் எதுவித ஊறுமின்றி அப்படியே இருந்தமை என்னை புழகாங்கிதம் அடையச் செய்துவிட்டது.


மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் பாலஸ்தான பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்பட்டு வெள்ளி தோறும் விசேட பூசை நடைபெறுகிறது. மிகவிரைவிலேயே கருங்கல்லால் அமையப் பெற்ற ஆலயத்தில் எம்பெருமான் எழுந்தருளுவார்.

இந்நேரத்தில் திருவாளர் ம.ஜெகநாதன் அவர்கள் தொகுத்து வெளியிடும் "வைரவர் பக்தி மாலை" நூல் மேலும் ஆலயத்திற்கு சிறப்பைக் கொடுக்கிறது.

வயவைப் பதியின் மைந்தர்கள், புலம்பெயர் உறவுகள் அனை வருக்கும் வைரவசுவாமியின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

அவனின்றி அணுவும் அசையாது!

ஆலய பரம்பரைக் குரு
பிரம்மஸ்ரீ இரா.இராமலிங்கசர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் தா வைரவா!



ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு வயவை நகர் வைரவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சேறைத் தலத்திலுள்ள சாரபரமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள காலவைரவரை வழிபட்ட திருநாவுக்கரசர் வைரவரைப் போற்றிப் பாடிய ஒரே ஒரு தேவாரப் பதிகம் இதுவாகும்.

## வைரவர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

விரித்த பல்கதிர்கொள் சூலம்
வெடிபடு தமருகம்கை
தரித்ததோர் கோலகால வைரவனாகி
வேழம் உரித்து உமை அஞ்சக் கண்டு
ஒண்திருமேனி வாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்வர்ணாகர்ஷண வைரவ அர்ச்சனை

ஓம் ஸ்ரீம் தன வைரவா போற்றி!
ஓம் ஸ்ரீம் தத்துவ தேவா போற்றி!
ஓம் ஸ்ரீம் தயாளா போற்றி!
ஓம் ஸ்ரீம் தனநாதா போற்றி!
ஓம் ஸ்ரீம் தனத்தேவா போற்றி!
ஓம் ஸ்ரீம் குலதேவா போற்றி!
ஓம் ஸ்ரீம் குருநாதா போற்றி!
ஓம் ஸ்ரீம் குண்டலினி தேவா போற்றி!
ஓம் ஸ்ரீம் குபேரா போற்றி!
ஓம் ஸ்ரீம் குணக்குன்றே போற்றி!
ஓம் ஸ்ரீம் வைரவா போற்றி!
ஓம் ஸ்ரீம் வளந்தருவாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் வற்றாத தனமே போற்றி!
ஓம் ஸ்ரீம் வறுமையின் மருந்தே போற்றி!
ஓம் ஸ்ரீம் வனத்துறை வாழ்வே போற்றி!
ஓம் ஸ்ரீம் திருவுடைச்செல்வா போற்றி!
ஓம் ஸ்ரீம் தினம்தினம் காப்பாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் திருமணத்தேவா போற்றி!
ஓம் ஸ்ரீம் திருவருள் தருவாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் திருவடி காட்டுவாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் சித்தர்கள் வாழ்வே போற்றி!
ஓம் ஸ்ரீம் சித்தருக்கு சித்தா போற்றி!
ஓம் ஸ்ரீம் சித்திகள் எட்டே போற்றி!
ஓம் ஸ்ரீம் சித்தாந்த வடிவே போற்றி!
ஓம் ஸ்ரீம் சித்திகள் முடித்தாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் முழு நிலவானாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் முனிவர்கள் மருந்தே போற்றி!
ஓம் ஸ்ரீம் முடியாதன முடிப்பாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் முழுத்தனம் தருவாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் முகிழ்நகை வைரவா போற்றி!
ஓம் ஸ்ரீம் இரும்பை பொன்னாக்கினாய் போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீம் இருந்தருள் செய்ய வந்தாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் வேண்டதக்கவை அறிவாய் போற்றி!
ஓம் ஸ்ரீம் வயவை வைரவா போற்றி!
ஓம் ஸ்ரீம் எம்மை வாழவைப்பாய் போற்றி!

வயவை நகர் வைரவன் இருதாள் பணிவோம்
இன்பமும் வாழ்வும் என்றுமே அடைவோம்
இனி எல்லாம் ஜெயமே !

## வைரவர் அருட்பா

ஞானப் பொருளே சரணம் சரணம்
பிட்சாடனாரே சரணம் சரணம்
மோனவரம்பே சரணம் சரணம்
மோட்ச விளக்கே சரணம் சரணம்
வான ஒளியே சரணம் சரணம்
வளர் திருவிளக்கே சரணம் சரணம்
நலம்தரும் இறைவா சரணம் சரணம்
நாய்வாகனனே சரணம் சரணம்
பிரம்ச்சாரியே சரணம் சரணம்
பூதநாதனே சரணம் சரணம்
ஈஸ்வரன் மைந்தா சரணம் சரணம்
ஈசானனே சரணம் சரணம்
வானக்கூந்தலுடையாய் சரணம் சரணம்
வானவர் நிதி பெற்றாய் சரணம் சரணம்
சிவனே, ஒளியே, திருவே சரணம் சரணம்
சிவந்த திருமேனியனே சரணம் சரணம்
வெள்ளை உள்ளமே சரணம் சரணம்
வேதாந்தப் பொருளே சரணம் சரணம்
அமுதே, அறிவே, அழகே சரணம் சரணம்
குமுதே மலரே மதுவே சரணம் சரணம்
அண்ணலே வைரவா சரணம் சரணம்
அனைவரையும் காப்பாய் சரணம் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் அகவல் (அழைப்பு)

"அகவல்" என்பது கூப்பிடுதல் என்று பொருள்படும். தெய்வங்களின் மேன்மை, சிறப்பு போன்றவற்றை கூறி அழைத்தலே இங்கு நாம் அகவல் என்கிறோம்.

வைரவருக்குரிய இந்த அகவலை நாம் கூறும்போது வைரவப் பெருமான் உடனே எமது அழைப்பிற்கு செவிசாய்ப்பார்.

சீர் புகழ் வைரவன் செந்தமிழ் உரைக்க
கார் புகழ் மேனிக் கணபதி அருளே
ஆதிபராபரி அருளிய தல்விழி
சோதி போலெழும்பி சுடரொழியாகி
வீதியில் எழும்பி விசும்பையும் கடந்து
ஓதிய மந்திரம் உட்சாடனமாய்
ஓங்காரம் கொண்டு ஒரு முகமாகி
ஆங்காரம் கொண்டகாரமாகி
விக்கினம் தீர்க்கும் விறுமவயிரவா
அப்பமும் அவலும் ஆலங்காயும்
செப்பிய மாங்கனி திகழ் தட்டுறட்டி
தேன் கதலிப்பழம் பலாப்பழம்
அத்தனை எல்லாம் அருந்திடுவைரவா

ஐயும் கிலியும் அகோர வைரவா
மவ்வும் கிலியும் ஆன வைரவா
சவ்வும் கிலியும் சங்கார வைரவா
றியுங் கிலியும் ஏறு வயிரவா
பவ்வும் கிலியும் பாதாள வைரவா
சதியோடு அருள்புரி சச்சுதானந்தா
பாம்பெலும் பணியும் பராபர சொரூபமே
சாம்பலும் அணிந்து தலையோடேத்தி
சுடலையில் நின்று சுடலை காத்தாயே
கெங்கைக் கரையில் கிருபாகரனே
நம்பின பேர்க்கு நடனம் புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிக்கும் பேயை பதற அடித்து
பக்கப் பசாசை பதறத் துரத்தி
ஈடளித்திடுவாய் ஏக வைரவா
ஐயனே உந்தன் அருளுண்டானால்
வையகம் பிணி வாதபித்தம் வந்திடு சிலேட்டுமம்
அப்பிணி எல்லாம் அகற்றிடு வைரவா
கையில் பிடித்த கண்ட கோடாலியும்
காதிலணிந்த கவச குண்டலமும்
காலில் தரித்த தண்டை பாடகமும்
பாதக் கொலிசு பழ பழ என்றொலிக்க
நாத வீணை நலம் பெற முழங்க
செம்பொன் மேனியும் திருநீற்றழகும்
உச்சும் குடும்பியும் உதிர வாயும்
அலறிய பல்லும் அண்ணார்ந்த பார்வையும்
அரையில் கட்டிய காவியொட்டியாணமும்
சூலமும் மழுவும் சுடரொழி வாழும்
அன்பாய் வந்து அடியேன் செய் பூசையை
நன்பாய் வந்து நல்லருள் புரிவாய்
நாய் வாகனத்தில் நடனமிடுபவா
நம்பின பேர்க்கு நல்வரமளிப்பாய்
நான்முகன் சிரசை நறுக்கிய வைரவா
நளின காளியுடன் நடனம் புரிந்தவா
எப்போதும் என்னை ரட்சித்தருள்வாய்
ஈசன் தன் திருமகனே
மாதன வாவி மலர்த் தடாகத்தருகில்
தானத்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் பருவத்துதித்துக் களிக்கும்
சச்சிதானந்தா சரணம் சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களை காவல்புரியும் வைரவருக்குரிய தல புராணங்கள்

## 1. கந்த புராணம்

பரமனை மதித்திடா பங்கயாசனன்
ஒரு தலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம். -1

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வால மாமெனச்செ
ஞ்சுடர் படிவமேற் செறித்த மாமணிக்க
ஞ்சுகக் கடவுள் பெற் கழல் களேத்துவாம். -2

## 2. பழைய காஞ்சிப் புராணம்

கொச்சையறி வுற்பவமாங் கொள்கையினா லரிபிரமர் கூடிவீணின்மெ
ய்ச்சமரம் புரிந்திகலி யொருவரொரு வரை மிகவும் வெறுக்கும் நாளி
லச்சுறவுற் றவரகந்தை விடுமாறு நெருக்கி யினிதருளே செய்யுங்க
ச்சிவடு கக்கடவுண் முச்சிகை வேற் படையினயே கருதி வாழ்வாம்.

## 3. திருவாவடுதுறைப் புராணம்

காலன் மார்பிற் கான்மலர் நீட்டிய
சீலன் கோயிற் திறமிகழ்ந் தோர்களைச்சூ
ல மேற்றுஞ் சுழல்விழிக் கேத்திர
பாலன் பொற்பதம் பற்றி பணிகுவாம்.

## 4. காஞ்சிப் புராணம்

எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே
தெளியுமா வலியைச் சொற்றோற் செகுத்துரிக் கவயம்
வளியுளர் கச்சி காவல் வைரவவர்க் கன்பு செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.திருவணைக்காப் புராணம்

உலக மளித்தல் சுதந்தர மன்றுவண
முயர்த்தோர் கெனவ வன்சே
யிலகு முருவம் பொடித்த வன்பா
லெழுந்து படைப்புஞ் சுதந்தரமன்ற
லர்மெல் லணயாற் கெனவனை
யரங்கத் திசைமாமு கனாக்கிப்
பலரும் வெருவப் பொழிநெய்த் தோர்ப்பயிக்கம்
புகுந்தோம் பதம் பணிவோம்.

## 6. திருப்பாதிரிப் புலியூர் புராணம்

தருணமலர்க் கோயிறை யுச்சிமுடிக்க
பாலத்தைத் தளிர்க்கை யேந்தி
யருணநீர் பலிக்கிமையோர் நடுங்கவலம்
வந்து மாற்காவி நல்கி
மருணனிசெய் மூவிலைவேண் மணிநாக
முடுக்கையி வை வயங்க வேந்திக்
கருணைமறம் பூண்டெழில் செய் கடைஞாழல்
வைரவரைக் கருதி வாழ்வாம்.

## 7. திருச்செந்தூர் புராணம்

கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளை யா
னஞ்சு கம்மிலொன் றற்றிடக் கிள்ளியே
மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்திறக்
கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவோம்.

## 8. கடம்பவனப்புராணம்

கருதரிய லளிதைபர னெற்றி யிற்றோன் றிச்கசூல கபாலமேந்தி
வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவாயண்டதத்து வங்கண்மாற்றி
யரிசரும கஞ்சுகியாய் வேதவெகினூர்த்து முன்போலவுண்டாக்கி
யிருமைபெறக் காத்தருளுங் கேத்திரபாலன் றிருத்தா ளேத்தல்
- செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. கடம்பர் கோயிற் புராணம்

கயிரவ நான்மலர்க் கவின்க ணார்மற்
செயிரவ நாடொறு மியற்றி யேதிரி
யுயிரவ நானென வொறாது காத்தருள்
வைரவவ நாதனை வணங்கி வாழ்த்துவோம்.

## 10. புலியூர்ப் புராணம்

விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா புரத்தினிது மேவினோர் கண்
மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற் சூலத்தின் மருவ வைத்தே
யுதிப்பாலன்னையர் முலைகண் மீட்டருந்தா வகை முத்தி
- யுதவுந்தில்லைம்
பதிப்பால வைரவவன்றன் பாதசரோ குகங்ளென் றுப்பரவி வாழ்வாம்.

## 11. சீர்காழிப் புராணம்

துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள்வலிதனை வாங்குஞ்
சிங்கவேற்றுரி யரைக்கசைத்து லகெலாந் தேர்ந்தளத்த வன்மேனி
றங்கம் யாவுமோர் கதையதாகக் கொண்டத ளங்கியாப் புனைதாழிச்
சங்கு வார்குழைச் சட்டை நாயகன்றுணைத் தாமரைச் சரண்போற்றி.

## 12. திருப்பூவணப் புராணம்

அரிபிரம ரகந்தை கெட வண்டங்க
ளுடைத் தெரியு மங்கிக் கோட்பட்
டுரியபல வுலகமெலா மொழிந்திடுநா
ளவர்கடம துடன் மேற்கொண்டு
குருதிவாய் கொப்பளிக்குங் கூரயின்மூ
விலைச் சூலங் கொண்ட திண்டோட்
கருவரைநேர் தருவடுகக் கடவுளெமைப்
புரப்பக் கைகூப்பு வாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. அவிநாசிப் புராணம்

அஞ்சுகனை யாதிலகு மாடவரக்
கங்கணனை யகலும் வானில்
விஞ்சுகனை மாரிநிகர் மேனியனை
வாசியென விரைந்து தாவும்
பைஞ்சுகனை யேயெரித்த புக்கொளியா
ரெயில் காவல் பரிக்கும் வீரக்
கஞ்சுகனை வேணிமலர்க் கிஞ்சுகனைப்
பரசுகனைக் கழறல் செய்வாம்.

## 14. பவானி கூடற் புராணம்

பொருதலை யுகளும் வேணிப் புனிதனே பரமென் றுளளங்
கருதலை யயனீ யென்னக் குடிலையுங் கழலத் தேறா
வொருதலை யுகிராற் கிள்ளி யும்பர்மா லுதிரம் வாங்கும்
விரிதலை சூலச் செங்கை விமலனை வணக்கஞ் செய்வாம்.

## 15. திருவோத்தூர் புராணம்

வேரிமலர்ப் பண்ணவன்றன் சிரமொன்றை
நகநுதியால் வீட்டி யற்ற
சோரிமலர் தலைநிலத்திற் பாயாதச்
சிரத்தேற்றுத் தொடர்ந்து போந்து
வாரிமலர் கண்வளர்மா னெற்றி யெற்றிக்
குருதி கொடு மமதை நீக்குங்
கரிமலர்க் கழலிரண்டுங் கரமிரண்டுங்
கூப்பி நிதம் கருதி வாழ்வாம்.

## 16. மருதூர்ப் புராணம்

கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று
வாய்மூடுவற் குதிரை யானைப்
பாணியிற்கங் கணம்புனைந்த வுரகமணி
வெயில் விரிக்கும் பண்பினானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணியரன் றிருக் கோயில் காப்பானை
நிருவாண வேடத்தானை
வானிலவு முத்தலைவேல் வ:கனைச் செந்
தமிழ்பாடி வணக்கஞ் செய்வாம்.

## 17 ஆதித்தகிரிப் புராணம்

பரநாத வரைமணிகிண் கிணியொலிப்பப்
படமெடுத்துப் பார்க்குந் துத்தி
வரநாக கங்கணத்தான் மாலகந்தை
யிருளகற்ற வந்த ஜோதி
யுரணாரும் வித்துருமச் செஞ்சடையா
னருளத்தி யுயரா தித்த
புரமேவு மணிவரை வாழ் சட்டைநா
யகன் மலர்த்தாள் போற்றி வாழ்வாம்.

## 18. திருநெல்வேலிப் புராணம்

பகருமறை பணைவனத்திற் பண்டிருத்த தாபதர்க
ணிகரிலவந் தவமெனவே நெறியிலவர் செயும் வேள்வி
புகர் முகவெங் கரியுரித்த புரிசடையோ னெல்வேலி
நகரினிது புரந்த சட்டை நாதனிரு பதம் பணிவாம்.

## 19. மருதவனப் புராணம்

மேலையோர் கற்பத் திருதியிற் கதிர்காண்
மேவுடுக் கணங்கள் கீழுறத்தீம்
பாலையொத்த திருசங் கீன்ற முத்தினங்கள்
பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியந் தோணி
விளங்கிடு வடுகனாங் கடவுள்
காலை மென் போதை யுச்சியிற் கொள்வாங்
கடுந்துயர் மாலைதீர்த் திடவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. திருநல்லூர் பெருமணப் புராணம்

புயற்காரின் வருமகவான் பணிவள்ளல்
பணிவிடைகள் பொருந்தி நாளுந்
செயற்காக வெங்கள் குலந்தனை
யடிமைக் கொண்டு வளர்தேவதேவ
னயற்காதி யமலனருள் செய்தபுர
மெனவுலக மனைத்துங் கூறும்
வயற்காழி நகர்ச்சட்டை நாதனிரு
பதமலரை வணங்கி வாழ்வாம்.

## 21. காசி ரகசியம்

தளம்பொலிமலரோ னாதி வானவர் தாழ்ந்து போற்ற
வுளம்பொலி காசி மேவு முயிர்கள் செய்பாவ மெல்லாங்
களம்பொலியாது தண்டங் கண்டறலொழித்து முத்தி
வளம்பொலிவகை செய்கால வைரவவற்கன்பு செய்வாம்.

## 22. திருநாகைக் காரோணப் புராணம்

பெருகுதன் புகழுளேனோர் பிரதாப மடக்கி யாங்கு
முருகுதங் கலரின் மேலோன் முண்ட வெண்கபாலத் துாடு
கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீரெற்ற
திருகு தீர் வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம்.

## 23. திருகுடைந்தைப் புராணம்

எழுவகைத் தாதுங் கூடினியங்கிடு முயிரொன் றேனு
நழுவிடி னியங்கா வென்று நவிறலை வெளிசெய் தாங்கு
முழுவலி நெடியோ னாதி மொய்த்த வானவர்மெய் நெய்த்தோர்
வழுவறக் கபாலத் தேற்ற வடுகனை வணங்கி வாழ்வாம்.

## 24. மாயுரப் புராணம்

ஓங்குநாற் படைமுன் னஞ்சு மொள்ளுகிர் படையுந் தேசு
வீங்குசக் கரமுனனான வெம்படை யஞ்சு மஞ்சுந்
தாங்குதூற் படையுங் கொண்டோர்தலைக்கல நெத்தோரேற்ற
பாங்குசேர் வடுகப்புத்தேள் பதமலர்க் கன்பு செய்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. உறையூர்ப் புராணம்

உலகமூன்றினுக்குந்தானே யொருமுத லெனத் தெரிந்தாங்
கலகீறிப் பொறிக டும்பி யலங்குமுத் தலைவே றாங்கி
வலனுடை மாயானதி வானவர் செருக்குமாறப்
பலருமுன் னஞ்ச நெய்த்தோர் பலிக்கொண்டோன் சரணஞ் சார்வாம்.

## 26. திருவம்பர்ப் புராணம்

சுவைமுனந் தெரிந்து பின்புதற் குதவுந்
தூத்துவ வேட்டுவர் பொருவச்
செவைமலர்கிழவன் றலைச்சுவை முன்னந்
தெரிந்து பின்னக் குதவுகிரு
நவை கொண்மா னெய்த்தோர்ச் சுவைமுனந் தெரிந்து
நயந்துபி னத்தலைக் குதவுங்
கவைபடு திறற்சூ லமுங்கரங் கொண்ட
கடவுடன் சேவடி போற்றி.

## 27. திருவாளொளிப்புற்றூர்ப் புராணம்

மறைகமழ் கபாலத் தோடு மாயவற் மேனிநெய்த்தோர்து
றைகமழ் கொடிய வெந்தீச் சூலமுங்கரத்திற்றாங்கி
முறைகம முலகழல் யார்க்குமூடிய பெருக்கு மாய்க்கு
மிறைகமழ் வடுகப் புத்தேளிணையடிக்கன்பு செய்வாம்.

## 28. விளத்தொட்டிப் புராணம்

இருட்பெரு நிரய மேவற்கேதுவாஞ் செருக்கு மேவில்
வெருட்பெருந் தண்டமேவு மிகவுமென் றுணர்த்தி யாங்கு
மிருட் பெருஞ் செயலி னீங்கா மாலுடம் புரித்துப் போர்த்த
வருட்பெரு வடுகன் செம்பொ னம்புயப்பாதம் போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. கோயிலூர்ப் புராணம்

தெருட்பெரு நலன வாவித் தீவிர தரத்துற்றோர்க்கு
மருட்பெரு மாயை நூறி வல்வினைப் படலங்கீறிச்
சுருட்பெருங் கொடியதுக்க நிவர்த்தியுஞ் சுகத்தின்சேறு
மருட் பெருஞ்செயலானல்கும் வடுகனையடைந்து வாழ்வாம்.

## 30. திருக்குறுக்கைப் புராணம்

ஆக்கும் வினைமலர வனதன் றென்றற
கவனுத் தமாங்க நான்குங்
காக்கும் வினைமாய வனதன் றென்றற்
கவன் மேனி கழிநெய் தோரும்
தாக்கும் வினையாள ருந்தேர் சான்றுரைக்க
கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு
போக்கும் வினைச்சூற் படையுபாங்க முங்கொள்
வடுகனடி போற்றி வாழ்வாம்.

## 31. தனியூர்ப் புராணம்

மறைபுகழ் தானேயோம்ப வறங்கு கேத்திரத் னெல்லை
பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்ப்பினக் கேற்றதண்டங்
குறையற வியற்று தண்டதரன் குறுகாது தானே
முறையுற வுஞற்றிப் போக்கு முதல்வனை வணக்கஞ் செய்வாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வமும், வெற்றியும் தரும் ஸ்லோகம்

ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளிய "ஸ்வர்ணாகர்ஷண வைரவ அஷ்டகம்" தனச் செழிப்பைத் தருவது. வெள்ளிக்கிழமை மற்றும் திங்கட்கிழமை நாட்களில் சந்தியா காலங்களில் படிப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியையும், தன விருத்தியையும் அடைவார்கள். கீர்த்தியும் தனத்தையும் தருவதுடன், சந்தோஷம் நிரந்தரமாக இருக்கும்.

இயன்றவர்கள் பௌர்ணமி அன்று இரவு எட்டு மணிக்கு தீபத்தை ஏற்றி, பதினெட்டுத் தடவை பாராயணம் செய்தால் கண்டிப்பாக தன லாபத்தை அடைவார்கள். நீண்ட நாட்களாகப் பிடித்துக் கொண்ட வறுமையில் இருந்து விடுபடுவார்கள். ஒன்பதாவது பௌர்ணமி அன்று அவலில் பாயாசம் செய்து நிவேதிக்கலாம்.

**வைரவ தேவா வைரவ தேவா**
**வளமது தந்திடுவாய்**
**வைரவ தேவா வைரவ தேவா**
**ஜெயமது அருளிடுவாய்**

தனந்தரும் வைரவன் தளரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந்திறந் தவன்பதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்துவிடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப் புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் -1

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
தானென வந்திடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் -2

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான் உடமைகள் காப்பான்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் -3

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான்
நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைந்திடுவான்
வான்மழை எனவே வளங்களைப் பொழிவான்
வாழ்ந்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் -4


பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணங்கள் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் -5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் -6

சதுர்முகன் ஆனவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் -7

ஜெய ஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெய ஜெய வயிரவா செகம்புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடுயாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் -8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவச் சக்கரம்

பன்னிரு திருமுறைகளில் திருமூலர் எழுதிய திருமந்திரம் 10ஆம் திருமுறையாகும். திருமந்திரம் ஒன்பது பகுதிகளாக உள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஒரு தந்திரம் எனப் பொருள் பெறும். எனவே திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை உள்ளடக்கியதாகும். இதில் நான்காம் தந்திரம் மந்திர சாத்திரம் அல்லது உபாசன மார்க்கத்தைப் பற்றியது. இந்த வைரவச் சக்கரத்தில் ஆறு பாடல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறிந்த பிரதமை யோடு ஆறும் அறிஞ்சு
அறிந்த அச்சத்தம் இம் மேல் இவை குற்றம்
அறிந்தவை ஒன்று விட்டு ஒன்று பத்து ஆக
அறிந்து வலம் அது ஆக நடவே. -1

நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண் அது போக்கித்
தொடர்ந்த உயிர் அது உண்ணும் பொழுது
படர்ந்த உடல் கொடு பந்து ஆடல் ஆமே. -2

ஆமே அப் பூண்ட அருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமும் சூலமும் கைக் கொண்டு அங்கு
ஆமே தமருக பாசமும் கை அது
ஆமே சிரத்தொடு வாள் அது கையே. -3

கை அவை ஆறும் கருத்து உற நோக்கிடும்
மெய் அது செம்மை விளங்கு வயிரவன்
துய்யர் உளத்தில் துளங்கு மெய் உற்றது ஆய்ப்
பொய் வகை விட்டு நீ பூசனை செய்யே. -4

பூசனை செய்யப் பொருந்தி ஓர் ஆயிரம்
பூசனை செய்ய மது உடன் ஆடும் ஆல்
பூசனை சாந்து சவாது புழுகு நெய்
பூசனை செய்து நீர் பூசலை வேண்டுமே. -5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய வாறு கலகமும் ஆயிடும்
வேண்டிய ஆறின் நுண் மெய்யது பெற்றபின்
வேண்டியவாறு வரும் வழி நீ நட
வேண்டிய வாறு அது ஆகும் கருத்தே. -6

## வைரவ சஷ்டிகவசம்

வணங்குவோர்க்கு வாழ்வு தரும்
வாழ்த்துவோர்க்கு வசதி தரும்
போற்றுவோர்க்கு புகழ் தரும்
தூற்றுவோர்க்கும் இன்பம் தரும்
நினைத்தாலே நிம்மதி தரும்
நீடு வாழ் வைரவ சஷ்டி கவசமே!
பக்தர் பரவசமுற பலன் தரும்
வைரவர் திருவடியே கதி

வருக வருக வடுகவைரவா வருக!
வளம்தர வருக வஜ்ரவைரவா வருக!
வருக வருக உக்கிரவைரவா வருக!
உவகைதர வருக உலகவைரவா வருக!
வைரவி போற்றும் வைரவா வருக!
ஆனந்த நடனா ஆனந்த வைரவா வருக!
ஆணவம் அழிக்கும் ஆக்ரோஷ வைரவா வருக!
ஆபத்தில் காக்கும் ஆபதோத்தாரண வைரவா வருக!
காலத்தின் நாயகா கால வைரவா வருக
கலக்கம் போக்கும் கதாயுத வைரவா வருக!
நலம் தரும் நரசிங்க வைரவா வருக!
நாளும்காக்கும் நாக வைரவா வருக!
கோபம் போக்கும் கோவிந்த வைரவா வருக!
ஞாலம் போற்றும் ஞானவைரவா வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகம் தீர்க்கும் தராபாலன வைரவா வருக!
மோகம் போக்கும் முண்டனப்பிரபு வைரவா வருக!
அவலம் போக்கும் அஸிதாங்கவைரவா வருக!
குவலயம் காக்கும் குரோதன வைரவா வருக!
உலகம் புரக்கும் உன்மத்த வைரவா வருக!
திருவருள் புரியும் திகம்பர வைரவா வருக!
சண்டைகள் தடுக்கும் சண்டவைரவா வருக!
ருசியான உணவுதரும் ருசிவைரவா வருக!
சந்தோஷம் தரும் சம்கார வைரவா வருக!
பித்தம் போக்கும் பீஷணவைரவா வருக!
வருகவருக வரமருளும் வரதவைரவா வருக!
தருகதருக தாராளமாய் தரும் தயாள வைரவா வருக!
பருகபருக பழரசம் தரும் பிதாமக வைரவா வருக!
பெருகபெருக செல்வம் தரும் பிசித வைரவா வருக!
நடனம் புரியும் நர்த்தன வைரவா வருக!
சதிராடும் சர்ப்ப வைரவா வருக!
ஆட்டமாடும் ஆனந்த வைரவா வருக!
பாட்டுபாடும் பர்வத வாகன வைரவா வருக!

பாசமிகு வைரவமூர்த்தியே வருக!
காலனைவிரட்டும் கால வைரவா வருக!
ஸமயோசித புத்தி தரும் ஸமயவைரவா வருக!
கயவர்களுக்கு காலனாகும் காலாக்கினிவைரவா வருக!
பாவிகளையழிக்கும் பாதாள வைரவா வருக!
சுகமான வாழ்வுதரும் சுகாசன வைரவா வருக!
சந்ததிதரும் சந்தான வைரவா வருக!
ஆபத்தை நீக்கும் ஆதிவைரவா வருக!
சிவபக்தியூட்டும் சிவஞான வைரவா வருக!
வெற்றிதனை விரைந்து தரும் வீர வைரவா வருக!
நிம்மதிதரும் சூலாயுதபாணி வைரவா வருக!
சுற்றம் காக்கும் சுவேட்சர வைரவா வருக!
தடைகளிலிருந்து விடுவிக்கும் சுதந்திர வைரவா வருக!
விசாலமனம் தரும் விசாலாக்ஷ வைரவா வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸார வாழ்வுதரும் சம்ஸார வைரவா வருக!
குறைவிலா செல்வம் தரும் குபேர வைரவா வருக!
கல்வி உயர்வு தரும் கபால வைரவா வருக!
மேன்மை தரும் மேகநாத வைரவா வருக!
சோதனை நீக்கும் சோமசுந்தர வைரவா வருக!

## வெற்றி தரும் வைரவர் 108 போற்றி

தேய்பிறை அஷ்டமி திதியில் வைரவர் வழிபாடு செய்வது பயத்தைப் போக்கி, வாழ்வில் தன்னம்பிக்கையைத் தரும். இந்த நாளில் மாலை 4.30- 6 மணிக்குள் திருவிளக்கேற்றி வீட்டிலேயே இந்த போற்றியைச் சொல்லலாம். வைரவர் சன்னதி முன்பு கூட்டாக அமர்ந்து, ஒருவர் சொல்ல மற்றவர்கள் திருப்பிச் சொல்வதும் சிறப்பாகும்..

01. ஓம் வைரவனே போற்றி
02. ஓம் பயநாசகனே போற்றி
03. ஓம் அஷ்டரூபனே போற்றி
04. ஓம் அஷ்டமித் தோன்றலே போற்றி
05. ஓம் அயன்குருவே போற்றி

06. ஓம் அறக்காவலனே போற்றி
07. ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
08. ஓம் அடங்காரின் அழிவே போற்றி
09. ஓம் அற்புதனே போற்றி
10. ஓம் அசிதாங்க வைரவனே போற்றி

11. ஓம் ஆனந்த வைரவனே போற்றி
12. ஓம் ஆலயக்காவலனே போற்றி
13. ஓம் இன்னல் பொடிப்பவனே போற்றி
14. ஓம் இடுகாட்டில் இருப்பவனே போற்றி
15. ஓம் உக்ர வைரவனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஓம் உடுக்கை ஏந்தியவனே போற்றி
17. ஓம் உதிரம் குடித்தவனே போற்றி
18. ஓம் உன்மத்த வைரவனே போற்றி
19. ஓம் உறங்கையில் காப்பவனே போற்றி
20. ஓம் ஊழ்வினை தீர்ப்பவனே போற்றி

21. ஓம் எல்லை தேவனே போற்றி
22. ஓம் எளிதில் இரங்குபவனே போற்றி
23. ஓம் கபாலதாரியே போற்றி
24. ஓம் கங்காளமூர்த்தியே போற்றி
25. ஓம் கர்வ பங்கனே போற்றி

26. ஓம் கல்பாந்த வைரவனே போற்றி
27. ஓம் கதாயுதனே போற்றி
28. ஓம் கனல்வீசும் கண்ணனே போற்றி
29. ஓம் கருமேக நிறனே போற்றி
30. ஓம் கட்வாங்க தாரியே போற்றி

31. ஓம் களவைக் குலைப்போனே போற்றி
32. ஓம் கருணாமூர்த்தியே போற்றி
33. ஓம் கால வைரவனே போற்றி
34. ஓம் காபாலிகர் தேவனே போற்றி
35. ஓம் கார்த்திகையில் பிறந்தவனே போற்றி

36. ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
37. ஓம் காசிநாதனே போற்றி
38. ஓம் காவல்தெய்வமே போற்றி
39. ஓம் கிரோத வைரவனே போற்றி
40. ஓம் கொன்றைப்பிரியனே போற்றி

41. ஓம் சண்ட வைரவனே போற்றி
42. ஓம் சட்டை நாதனே போற்றி
43. ஓம் சம்ஹார வைரவனே போற்றி
44. ஓம் சங்கடம் தீர்ப்பவனே போற்றி
45. ஓம் சிவத்தோன்றலே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. ஓம் சிவாலயத்து இருப்போனே போற்றி
47. ஓம் சிக்ஷகனே போற்றி
48. ஓம் சீர்காழித்தேவனே போற்றி
49. ஓம் சுடர்ச்சடையனே போற்றி
50. ஓம் சுதந்திர வைரவனே போற்றி

51. ஓம் சிவ அம்சனே போற்றி
52. ஓம் சுவேச்சா வைரவனே போற்றி
53. ஓம் சூலதாரியே போற்றி
54. ஓம் சூழ்வினை அறுப்பவனே போற்றி
55. ஓம் செம்மேனியனே போற்றி

56. ஓம் க்ஷேத்ரபாலனே போற்றி
57. ஓம் தட்சனை அழித்தவனே போற்றி
58. ஓம் தலங்களின் காவலனே போற்றி
59. ஓம் தீது அழிப்பவனே போற்றி
60. ஓம் துர்சொப்பன நாசகனே போற்றி

61. ஓம் தெற்கு நோக்கனே போற்றி
62. ஓம் தைரியமளிப்பவனே போற்றி
63. ஓம் நவரச ரூபனே போற்றி
64. ஓம் நரசிம்ம சாந்தனே போற்றி
65. ஓம் நள்ளிரவு நாயகனே போற்றி

66. ஓம் நரகம் நீக்குபவனே போற்றி
67. ஓம் நாய் வாகனனே போற்றி
68. ஓம் நாடியருள்வோனே போற்றி
69. ஓம் நிமலனே போற்றி
70. ஓம் நிர்வாணனே போற்றி

71. ஓம் நிறைவளிப்பவனே போற்றி
72. ஓம் நின்றருள்வோனே போற்றி
73. ஓம் பயங்கர ஆயுதனே போற்றி
74. ஓம் பகையளிப்பவனே போற்றி
75. ஓம் பரசு ஏந்தியவனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. ஓம் பலிபீடத்து உறைவோனே போற்றி
77. ஓம் பாபம் தீர்ப்பவனே போற்றி
78. ஓம் பால வைரவனே போற்றி
79. ஓம் பாம்பணிந்த தெய்வமே போற்றி
80. ஓம் பிரளயகாலனே போற்றி

81. ஓம் பிரம்ம சிரச்சேதனே போற்றி
82. ஓம் பூஷண வைரவனே போற்றி
83. ஓம் பூதங்களின் நாதனே போற்றி
84. ஓம் பெரியவனே போற்றி
85. ஓம் பைராகியர் நாதனே போற்றி

86. ஓம் மல நாசகனே போற்றி
87. ஓம் மகோதரனே போற்றி
88. ஓம் மகா வைரவனே போற்றி
89. ஓம் மலையாய் உயர்ந்தவனே போற்றி
90. ஓம் மகா குண்டலனே போற்றி

91. ஓம் மார்த்தாண்ட வைரவனே போற்றி
92. ஓம் முக்கண்ணனே போற்றி
93. ஓம் முக்தியருள்வோனே போற்றி
94. ஓம் முனீஸ்வரனே போற்றி
95. ஓம் மூலமூர்த்தியே போற்றி

96. ஓம் யமவாதனை நீக்குபவனே போற்றி
97. ஓம் யாவர்க்கும் எளியவனே போற்றி
98. ஓம் ருத்ரனே போற்றி
99. ஓம் ருத்ராட்சதாரியே போற்றி
100. ஓம் வடுக வைரவனே போற்றி

101. ஓம் வடுகூர் நாதனே போற்றி
102. ஓம் வடகிழக்கு அருள்வோனே போற்றி
103. ஓம் வடைமாலைப் பிரியனே போற்றி
104. ஓம் வாரணாசி வேந்தே போற்றி
105. ஓம் வாமனர்க்கு அருளியவனே போற்றி

106. ஓம் விரும்பியதை அருள்வோனே போற்றி
107. ஓம் விபீஷண வைரவனே போற்றி
108. ஓம் வீழாமல் காப்பவனே போற்றி போற்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெம் சினப் பரி அழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகை என வாலமாம் எனச்
செம்சுடர்ப் படிவ மேல் செறித்த மா மணிக்
கஞ்சுகக் கடவுள் பொன் கழல்கள் ஏத்துவாம்.

தளம் பொலி மலரோன் ஆதிவானவர் தாழ்ந்து போற்ற
உளம்பொலி காசிமேவும் உயிர்கள் செய்பாவமெல்லாம்
களம் பொலியாது தண்டங்கண்டறவொழிந்து முக்தி
வளம்பொலி வகை செய் காலவயிரவற் கன்பு செய்வோம்.

சீரார் மதி சடையும் திருநீரும் திருமுகமும் கூராரிந்த
முக்கவர் சூலமும் கபாலமும் குன்றில்மிகும் காராரிந்த மேனி
பிறவியிலே வருமுன் காட்சி தர வாரார்
வளர் தெட்சிணகைலாச வடுக வைரவமே.

வஞ்சகர் அஞ்சத்தக்க வாள் நகை வதனம் வாழி
வெஞ்சமத்து அசுரர் செற்றவீர அட்டகாசம் வாழி
புஞ்சவல் இருள்வெல்லோதி பொறியினை அடக்கு நல்லார்
நெஞ்சகம் கவரா நின்ற நிர்வாணக் கோலம் வாழி.

மழுசூலம் கரத்தேந்தி-மறைவாகனத்தேறி - மாந்தர்
காக்கும் விழுதான தீச்சிகையும்-வெற்றிமிகு புன்னகையும்-
விண்ணோர்வேந்தின் பழுதானபகை நீக்கி - சுரர் சேனை
அழிவித்து-பாரைக்காத்து-தொழுவோர்க்கு துணைசெய்யும்
தோன்றல் எம் வைரவரே - துணைத்தாள் காப்பு.

காலத்தை வென்றவனே! காசிக்கு சென்றவனே! கயிலை
வாழும் மூலத்தை காட்டியவா! சூலத்தை நீட்டியவா!
ஞமலி வேதக்கோலத்தை காட்டியவா! கோபம் கொண்டு
வேழத்தை உரித்தவனே! வைரவா! பணிகின்றோம்
வினைகள் தீர்ப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்தலை மாலை வாழி-விலையிலாப்பணிப்பூண் வாழி!
புண்தலை கருமுள் பாசம் பொருதொடி கபாலம் வாழி!
மண்டு அலை வாரி வாய்பெய் மணி அரிச்சிலம்பு வாழி!
கண்ட அலை மொழி மார்பன் தோல்கரிய கஞ்சுகமமும் வாழி!
வாக்கிய விலாழி வாய்த்து மணியணி மிடற்றது இம்பர்
நோக்கிய கட்டு நிலநொறில் வயப்புரவி வாழி! தூக்கிய
துளிர் மென் தாலுச்சுருண்டவால் சுணங்கன் வாழி!
பாக்கிய வடுக நாத வைரவர் வாழி! வாழி!

மதியிருக்கும் சடைமுடியும் மூன்று கண்ணும் மணிமாலை
திருக்கரமும் திருநீற்றுப் பூச்சும் விதியெழுதும் வேதனவன்
கபாலம் சூடும் வியன்கழுத்தும் முப்புரிநூல் விரிந்த மார்பும்
பதிபுகழ் சூலமுடன் விளங்கக்காட்டி - பார்புரக்கும்
பரம்பொருளே, நிதிவழங்கி புதுவாழ்வு தருபவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானவைரவர் ஆலய தலவரலாறு

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம் 18 ஆம் நூற்றாண்டு பழைமை வாய்ந்தது எனினும் 16 ஆம் நூற்றாண்டு காலத்தில் இருந்தே வழிபாட்டுமுறை இருந்து வந்துள்ளது. நித்திய நைமித்திய பூசைகள் நாடோறும் இரு நேரப் பூசைகளாக நடைபெற்று வந்தன.



தற்போது இருக்கும் ஆலயத்தின் முன்றலில் தென்கிழக்காக உள்ள புளிய மரத்தின் அடியில் திரிசூலம் அமைத்து ஆரம்ப காலத்தில் வைரவரை வழிபட்டு வந்தனர். 18 ஆம் நூற்றாண்டில் வைரவருக்கென கிழக்கு நோக்கிய சிறு கொட்டகை ஒன்றை அமைத்து வழிபட்டு வந்ததாகவும், காலப்போக்கில் கொட்டகையை சீமெந்து கட்டிடமாக மாற்றியதாகவும் வழிவழி வந்த மூதாதையரின் கூற்றில் இருந்து அறியக்கிடக்கிறது. இந்தக் கட்டிடமே காலப்போக்கில் படிப்படியாக மண்டபங்கள், பரிவாரமூர்த்திகள், மடப்பள்ளி, மணிக் கோபுரம், என்பவற்றுடன் கூடவே நிரந்தர அர்சகர்களுக்காக வீடு என்பன கிராம மக்களால் கட்டப்பட்டு, பின்னாளில் தற்போதைய கோயிலாக பரிணமித்தது.

### ஆலய பூசகர்கள்

தெற்கு புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அப்பாசி ஐயர், காசி ஐயர் ஆகியோர் ஆரம்பத்தில் இவ் ஆலயத்தின் பூசைகளை பொறுப்பேற்று நடாத்தி வந்தனர். இதன் பின்னர் பிரம்மஸ்ரீ குமாரசாமி ஐயர் மற்றும் பிரம்மஸ்ரீ இளையதம்பி ஐயர் ஆகியோர் பூசைகளை செய்து வந்தனர். இவர்களின் முதுமை காரணமாக வடக்கு புன்னாலைக்கட்டுவன் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர், அவரின் மகன்கள், மருமக்கள் என வழிவழியாய் இவர்களே தற்போதைய அர்சகர்களாகவும் இருக்கிறார்கள் என்பதுடன் தற்போதைய மூத்த பிரசைகளால் அறியப்பட்டவர்களுமாவர்.

### ஆலய தர்மகர்த்தாக்கள்

இடைக்காலத்தில் இருந்து தர்மகர்த்தாவாக சின்னக்குட்டி விதானையாரும். தொடர்ந்து சங்கரப்பிள்ளை விதானையாரும் செயல்பட்டனர். 1958 ஆம் ஆண்டு தொடக்கம் சின்னக்குட்டி கனகசபை அவர்களும், 1978 ஆம் ஆண்டு தொடக்கம் கனகசபை இலங்கைநாயகம் அவர்களும் தர்மகர்த்தாக்களாகச் செயல்பட்டு வந்தனர். பொதுமக்களால் 1988 ஆம் ஆண்டு ஆலய பரிபாலனசபை உருவாக்கப்பட்டு அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளும் பரிபாலனசபையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவர் தோற்றம்:

வைரவர் நீலநிற மேனியராய் சிலம்பொலிக்கும் திருவடிகளை உடையவராய், நாகத்தை பூணூலாகவும், சந்திரனைத் தலையில் வைத்தும், சூலாயுதம், பாசக் கயிறு, அங்குசம் ஆகிய ஆயுதங்களைத் தாங்கியும் தலை மாலைகள் புரளும் திருமார்பும், சூலம், மழு, பாசம், உடுக்கை இவைகள் ஏந்திய பன்னிரு திருக்கரங்களையும் சிவபெருமான் போன்றே மூன்று கண்களையும், இரண்டு கோரைப்பற்களும், செஞ்சடையும், கோபச் சிரிப்பும், உக்கிர வடிவமும் உடையவராய் காட்சியளிப்பார்.

## யார் இந்த வைரவர்?



அந்தகாசுரன் எனும் அசுரன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தால் ஆணவம் கொண்டு, தேவ முனிகளை வதைத்தான். சிவனிடமிருந்து இருள் என்ற பெரும் சக்தியைப் பெற்றமை யால், உலகை இருள்மயமாக்கி ஆட்சி செய்தான். தேவர்களும், முனிவர்களும் அவனை அழிக்க சிவனிடம் வேண்டினார்கள். தாருகாபுரத்தை எரித்த காலாக்னியை வைரவ மூர்த்தியாக சிவன் மாற்றினார். எட்டு திசைகளிலும் இருந்த இருளை நீக்க எட்டு வைரவர்கள் தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன.

வைரவர் எட்டு திசைகளை காக்கும் பொருட்டு அஷ்ட (எட்டு) வைரவர்களாகவும், அறுபத்து நான்கு பணிகளை செய்ய அறுபத்து நான்கு வைரவர்களாகவும் விளங்குவதாக நம்பப்படுகிறது.

உடற்பற்றை நீக்கியபடியால் வைரவர் நிர்வாண கோலத்துடன் காட்சியளிக்கின்றார். வைரவர் காவல் தெய்வமாகையால் காவல் குறியீடான நாயை வாகனமாகக் கொண்டுள்ளார். இந்த வாகனமானது வைரவருக்குப் பின்புறம் குறுக்காகவும், அவருக்கு வலப்பக்கம் தலை உள்ளவாறும் இருக்கும்.

அஷ்ட வைரவ வடிவங்களில் அன்னம், ரிஷபம், மயில், கருடன், குதிரை, யானை, சிம்மம், நாய் ஆகியவை வாகனங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களும், துயரங்களும் வாழ்க்கையில் தொடர்கதையாகிப் போனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக வையிரவர் வழிபாடு கூறப்படுகிறது. கடவுள் வழிபாடு செய்து விட்டு அதற்கான பலன்களை எதிர்பார்க்கும் பக்தர்களுக்கு உடனடி நிவாரணம் தரும் கடவுளாக வைரவர் விளங்குகின்றார்.

நவக்கிரகங்களின் வக்கிரத்தால் பலர் வாழ்க்கையில் மிகுந்த துன்பத்தை அடைகிறார்கள். துன்பங்களிலிருந்து மீள வைரவர் பூஜை செய்வதனால் கடுமையான தோஷங்களும் நீங்கும் என்று வைரவர் வழிபாட்டில் பரிகாரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

## வைரவரை வழிபாடு செய்ய சிறந்த நாள்

பொங்கல் திருநாள், மகர சங்காராந்தி, ரதசப்தமி, உத்தராயன புண்ணியகாலத் துவக்கம் என எண்ணற்ற பாவங்களுடன் திகழும் தை மாதத்துக்கு இன்னொரு விசேஷம் காவல் தெய்வம் வைரவர் வழிபாட்டுக்கும் உகந்த மாதம். தை மாதம் முதல் செவ்வாயில் துவங்கி, அனைத்து செவ்வாய்க் கிழமைகளிலும் வைரவரை வழிபடுவது சிறப்பு. அதிலும் வைரவரின் மகாத்மியத்தை அறிந்து வழிபடுவதால், பலன்கள் பன்மடங்கு அதிகம் கிடைக்கும். இறை ஆணைப்படி, அனைத்து ஜீவராசிகளுக்கும் எல்லா ஐஸ்வர்யங்களையும் அள்ளித்தரும் பணியினை நிறைவேற்றுபவர்கள் அஷ்ட லட்சுமிகள். வைரவருக்கு மிகவும் உகந்த நாள் அஷ்டமி என கருதப்படுகிறது. அஷ்ட லட்சுமிகள் பொதுவாக, சக்திகளைப் பெற்று தாங்கள் பெற்ற அதனை பக்தர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றனர். தாங்கள் பெற்ற சக்தி குறைய குறைய, ஒவ்வொரு அஷ்டமியிலும் வைரவரை வழிபாடு செய்து தங்கள் சக்தியை பெருக்கி கொள்ளுகின்றார்கள்.

ஆகவே, அஷ்ட லட்சுமிகளே வழிபடும் அந்த அஷ்டமி நன்னாளில், நாம் நேரடியாக வைரவரை வணங்கிவந்தால், அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கும். தேய்பிறை அஷ்டமி, குறிப்பாக கார்த்திகை மாத தேய்பிறை அஷ்டமி வைரவ வணக்கத்திற்கு மிகவும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயாவிளான் இடப்பெயர்வு ஓர் பதிவு

இடப்பெயர்வுக்கு காரணமான உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரகடனம் முதல் முறையாக அரசாங்கத்தால் 1986 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அதன்படி பலாலி விமான நிலையத்தில் இருந்து ஆயிரம் [redacted] மீட்டர் தூரம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதுதான் முதலாவது பிரகடனமாகும். இதனைத் தொடர்ந்து இரண்டாவது பிரகடனம் 1990 ஆம் ஆண்டு வலிகாமம் வடக்குப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

### முதலாவது இடப்பெயர்வு:

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் வலிகாமம் வடக்கில் இடம்பெற்ற இடப்பெயர்வுதான் முதலாவது இடப்பெயர்வு எனக் குறிப்பிடலாம். மக்களை தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றிய இச்சம்பவம் 1986 ஆம் ஆண்டில் ஜனவரி 13 ஆம் திகதி இடம்பெற்றது.

இடப்பெயர்வு நாள் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு கரிநாள். அவர்கள் தமது சொந்த இடங்களிலிருந்து வேருடன் அகற்றப்பட்ட நாள். அன்றைய தினம் பலாலி விமானப்படைத் தளத்திலிழருந்து ஏழாலையை நோக்கி குரும்பசிட்டி ஊடாக முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையில் குரும்பசிட்டி, கட்டுவன், வயாவிளான் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முழுமையாகவே இடம்பெயர்ந்தார்கள்.

1987 ஜூலையில் இந்திய அமைதிப்படை வந்திறங்கிய பின்னர் உருவாகிய சமாதான காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஒன்றரை வருடங்களாகத் தொடர்ந்த தமது இடப்பெயர்வு வாழ்க்கை அத்துடன் முடிவுக்கு வந்துவிட்டதாக அவர்கள் நம்பிய போதிலும் உண்மையாக அமையவில்லை.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள நிலையில், சிலர் அந்தந்த கிராமங்களில் காணிகளை வேண்டி வீடுகளை அமைத்து அந்தந்த ஊர்வாசிகளாயினர். மேலும் சிலர் பிற நாடுகளில் அகதி அந்தஸ்த்தைப் பெற்று வாழ்ந்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாவது இடப்பெயர்வு:**

1990 ஆம் ஆண்டு இரண்டாவது ஈழப் போர் ஆரம்பமான பின்னர் வலிகாமம் வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களைக் கைவிட்டு வெளியேறுவதற்கு மீண்டும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி தமது வளம் மிக்க மண்ணை விட்டு ப[redacted]க்கணக்கான குடும்பங்கள் ஒரே நாளில் வெளியேற்றப்பட்டனர். குரும்பசிட்டி, கட்டுவன், பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, தையிட்டி, தெல்லிப்பளை, மாவிட்டபுரம், ஊறணி, வயாவிளான் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களே இப்படி வெளியேற்றப்பட்டனர். இது வலிகாமத்தின் இரண்டாவது இடப்பெயர்வாகும்.


வயாவிளானில் முதல் முறையாக 2011 ஆம் ஆண்டு மத்திய கல்லூரி உட்பட சில குடியிருப்புக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டது. தொடர்ந்து 2015-2018 ஆம் ஆண்டுகளிலும் சிறு சிறு பகுதிகள் விடுவிக்கப்பட்டது.

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயமும், அதற்கு கிழக்குப் புறமாக உள்ள சில குடியிருப்புக்களும் 19.6.2018 அன்று மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டது. ஆலயம் தவிர குடியிருப்புக்கள் அனைத்தும் அதிகம் சிதைக்கப்பட்ட அல்லது தரைமட்டமாக்கப்பட்ட நிலையில் காடாகவே காட்சி தந்தது. வீடுகள் இருந்தமைக்கான அடையாளங்களைக் கூட சில இடங்களில் காண முடியாதிருந்தது. குறிப்பாக மக்கள் தமது காணிகள் எங்கே இருந்தன என்பதைக்கூட அடையாளம் காண முடியாதவர்களாகவே இருந்தனர். அனேகமாக குடியிருப்பு காணிகளின் எல்லைகளைக்கூட வரையறுக்க முடியாதிருந்தது. ஆலயத்திற்கு பாதிப்பு குறைவாக இருந்தாலும், சேதாரம் அதிகமாக இருந்த காரணத்தினால் ஆலயத்தை புதிதாக அமைக்கவேண்டிய நிலையே காணப்பட்டது.

மக்கள் இடம்பெயர்ந்து 28 வருடங்களைக் கடந்துள்ள நிலையிலும் வயாவிளானில் கணிசமான பகுதிமக்கள் இன்னமும் மீளக்குடியேற அனுமதிக்கப்படாதவர்களாகவே இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Theepam Printer's Jaffna. 0772506234.

Digitized by Noolaham Foundation